**தலைப்பு 333 – கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 03 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. நிதி மீளாய்வுகள்

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக 05 மூலதன செலவினம விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 18,650,000 ஆன போதிலும், அவற்றுள் ரூபா 16,884,495 அல்லது 91 சதவீதம் எஞ்சியிருந்தது. | வருடாந்த பாதீட்டு நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. | அவதானிப்புகளுடன் இணங்குவதாவும், அந்த நிதியேற்பாட்டிலான சேமிப்புக்கு காரணமாக அமைந்தது திட்டமிடப்பட்ட அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் பிற்போடப்பட்டமையும், உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி பாடநெறிகள் கிடைக்காமையும், மூலதனத் தன்மையில் எதிர்பார்க்கப்பட்ட பழுதுபார்த்தல் செலவினங்கள் ஏற்படாமையும், மென்பொருள் அபிவிருத்தி திரண்ட நிதிய முகாமைத்துவ தகவல் |

| | | |
|---|---|---|
| | | கட்டமைப்பு (ITMIS) ஊடாக மேற்கொள்வதற்கு செயற்திட்டத்தின் பெறுகை நடைமுறையை இடைநிறுத்துவதற்கு நேர்ந்தமையாலும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 06 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான தேறிய நிதியேற்பாட்டின் 22 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 2,178,018 கூட்டுத்தொகை எஞ்சியிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், பதவியணியின் வெற்றிடம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்படாமையும், பாதீட்டு சுற்றறிக்கை 07/2019 இன் பிரகாரம், செலவினம முகாமைக்குட்டிடுத்தப்பட்ட மையும், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் - கட்டிட பராமரிப்பு தேவைப்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டவாறு அதிகரிக்காமையாலும் சேமிப்புகள் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நூற்றுக்கு நூறு சதவீதம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அடையப்பட்ட செயலாற்றல் முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **விசேட குறிகாட்டிகள்** | **பணி நிறைவடைந்துள்ள சதவீதம் (நூற்றுக்கு)** | | |
| (அ) அரசிற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் அறிக்கையிடுவதற்காக மத்தியப்படுத்தப்பட்ட | 50 – 75 | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைய | குறித்த மென்பொருளை தயாரித்தல் ஒருங்கிணைந்த திறைசேரியின் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு (ITMIS) |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்காக புதிய மென்பொருளொன்றை ஆரம்பித்தல். | | நடவடிக்கை எடுப்பதன் தேவைப்பாடு. | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதாக அறிவித்து அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஆ) | அரசிற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களுக்கும் தரவுக் கட்டமைப்பொன்றினை தயாரித்தல். | 75-89 | - மேற்ப - | உரிய அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | அரசின் நிதியல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதினய் அரச கணக்குகளில் அறிக்கையிடப்படுதல். | 50-74 | - மேற்படி - | அரசில்லாத சொத்துக்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்காக கொள்கையொன்று இல்லாதிருந்தமையால் குறித் கொள்கை சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 மற்றும் 02/2019 ஆகியவற்றின் மூலம் நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் நிதி எல்லைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் சொத்துக்களினை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கு உரிய வழிகாட்ல்களுடன் கூடிய முன்வைத்தலுக்கு கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை கணக்கு வைத்தல் அரச கணக்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | அரசின் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், மேவுகை செய்தல் மற்றும் கைத்தவிர்ப்பதற்காக நாளதுவரையாக்கப்பட்ட கிரய ஆக்கபூர்வ முறைமைப்படுத்தல் | 50 – 74 | - மேற்படி - | இந்த நோக்கங்களை நிறைவேற்றும் அடிப்படை செயன்முறையாக 01/2018 மற்றும் 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் வாகனங்களை |

| | | |
|---|---|---|
| நடைமுறை பின்பற்றப்பட வேண்டியமை. | | கைத்தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 அல்லது 23 சதவீதமான வெற்றிடங்கள் நிலவியதுடன், அவற்றுள் 02 பதவிகள் உயர் மட்டத்திலான வெற்றிடங்கள் ஆகும். | செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கும் பதவியணி வெற்றிடங்களை துரிதமாக நிர்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. | வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய பணிகளை மேற்கொள்ளுமாறு நிதி அமைச்சிற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இ வரை உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்படவில்லை. மூன்றாம் நிலையிலுள்ள மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள உத்தியோகத்தர்களின் தேவை நிலவிய போதிலும், நிறுவனத்தில் போதிய இடவசதி இல்லாதிருந்தமையால் இதுவரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மேற்படி (அ) இன் பிரகாரம், பதவியணி வெற்றிடங்கள் நிலவுதல் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கும் எனின், அந்த வெற்றிடத்தினை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு இல்லையெனின் அந்த பதவியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவம் கணக்காய்வின் போது சுட்டிக்காண்பிக்கப்பட்டது. | - மேற்படி - | ஆரம்ப நிலை பதவிகளில் நிலவும் 03 வெற்றிகளை கீழிறக்குவதற்காக 2020 சனவரி 23 ஆந் திகதி பதவியணியின மீளாய்வு தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கப்பாடு வெளியிடப்பட்டது. |